Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

Match the following

1.

1)	ரெட்டினா	அ)	கண்ணில் ஒளிக்கதிர் செல்லும் பாதை
2)	கண் பாவை	ஆ)	சேய்மைப் புள்ளி விழியை நோக்கி நகர்தல்
3)	சிலியரித் தசைகள்	இ)	அண்மைப்புள்ளி விழியை விட்டு விலகிச் செல்லுதல்
4)	கிட்டப்பார்வை	ஈ)	விழித்திரை
5)	தூரப்பார்வை	உ)	விழி ஏற்பமைவுத்திறன்

2 Marks

2. குவிலென்சு மற்றும் குழிலென்சு - வேறுபடுத்துக.
3. ஒளிவிலகல் எண் என்றால் என்ன?
4. ஸ்நெல் விதியைக் கூறுக.
5. குவிலென்சு ஒன்றில் F மற்றும் 2F புள்ளிகளுக்கு இடையே பொருள் வைக்கப்படும் போது உருவாக்கப்படும் பிம்பத்திற்கான கதிர் வரைபடம் வரைக.
6. நிறப்பிரிகை வரையறு.
7. ராலே சிதறல் விதியைக் கூறுக.
8. விழி ஏற்பமைவுத் திறன் என்றால் என்ன?
9. கிட்டப்பார்வை குறைபாட்டிற்கான காரணங்கள் யாவை?
10. வானம் ஏன் நீலநிறமாகத் தோன்றுகிறது?
11. போக்குவரத்துச் சைகை விளக்குகள் சிவப்பு நிறத்தில் அமைக்கப்படுவதன் காரணம் என்ன?

Multiple Choice Question

12. A, B, C, D என்ற நான்கு பொருள்களின் ஒளி விலகல் எண்கள் முறையே 1.31, 1.43, 1.33, 2.4 எனில், இவற்றில் ஒளியின் திசைவேகம் பெருமளவாக உள்ள பொருள் எது?
    (a) A (b) B (c) C (d) D
13. பொருளின் அளவிற்கு சமமான, தலைகீழான மெய்ப்பிம்பம் கிடைக்க பொருள் வைக்கப்பட வேண்டிய தொலைவு
    (a) f (b) ஈறிலாத் தொலைவு (c) 2f (d) f க்கும் 2f க்கும் இடையில்
14. மின் விளக்கு ஒன்று குவிலென்சு ஒன்றின் முதன்மைக் குவியத்தில் வைக்கப்பட்டுள்ளது. மின் விளக்கு ஒளியூட்டப்படும் போது, குவிலென்சானது
    (a) விரிக்கும் கற்றைகளை உருவாக்கும் (b) குவிக்கும் கற்றைகளை உருவாக்கும் (c) இணைக்கற்றைகளை உருவாக்கும் (d) நிறக் கற்றைகளை உருவாக்கும்.
15. குவி லென்சின் உருப்பெருக்கமானது எப்போதும் _____ மதிப்புடையது.
    (a) நேர்க்குறி (b) எதிர்க்குறி (c) நேர்க்குறி (அ) எதிர்க்குறி (d) சுழி
16. ஒரு குவி லென்சானது, மிகச்சிறிய மெய்பிம்பத்தை முதன்மைக் குவியத்தில் உருவாக்கினால், பொருள் வைக்கப்பட்டு இடம் _____
    (a) முதன்மைக் குவியம் (b) ஈறிலாத் தொலைவு (c) 2f (d) f க்கும் 2f க்கும் இடையில்
17. ஒரு லென்சின் திறன் -4D எனில் அதன் குவியத் தொலைவு
    (a) 4 மீ (b) -4.0 மீ (c) -0.25 மீ (d) -2.5 மீ
18. கிட்டப்பார்வை குறைபாடு உடைய கண்ணில், பொருளின் பிம்பமானது _____ தோன்றுவிக்கப்படுகிறது.
    (a) விழித் திரைக்குப் பின்புறம் (b) விழித்திரையின் மீது (c) விழித் திரைக்கு முன்பாக (d) குருட்டுத் தானத்தில்
19. விழி ஏற்பமைவுத் திறன் குறைபாட்டைச் சரி செய்ய உதவுவது
    (a) குவி லென்சு (b) குழி லென்சு (c) குவி ஆடி (d) இரு குவிய லென்சு
20. சொல் அகராதியில் உள்ள சிறிய எழுத்துகளைப் படிப்பதற்கு உகந்த லென்சு எது?
    (a) 5 செ.மீ குவிய தூரம் கொண்ட குவி லென்சு (b) 5 செ.மீ குவிய தூரம் கொண்ட குழி லென்சு (c) 10 செ.மீ குவிய தூரம் கொண்ட குவி லென்சு
    (d) 10 செ.மீ குவிய தூரம் கொண்ட குழி லென்சு
21. ஒரு முப்பட்டகத்தின் வழியே செல்லும், நீலம், பச்சை மற்றும் சிவப்பு நிறங்களின் திசை வேகங்கள் V_B, V_G, V_R எனில் பின்வருவனவற்றுள் எச்சமன்பாடு சரியானது?
    (a) $V_B = V_G = V_R$ (b) $V_B > V_G > V_R$ (c) $V_B < V_G < V_R$ (d) $V_B < V_G > V_R$